2022 ஏப்ரல் 25]

அவசியத்தை உணர்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுறுத்தலைப்பெற்று, நிச்சயம் அதைச் செயல்பட வைப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

169—

பேருந்து வசதி

***7033—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோட்டிலிருந்து ராசிபுரம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருச்செங்கோடு பேருந்து நிலையத்திலிருந்து ராசிபுரம் பேருந்து நிலையம் வரையிலான வழித்தட நீளம் 38.1 கிலோ மீட்டராகும். இது தமிழ்நாடு மோட்டார் வாகன விதி, 1989 அத்தியாயம் I உட்பிரிவு 3 (e)-ன்படி, நகரப் பேருந்துகளின் இயக்கத்திற்கு அனுமதிக்கப்பட்ட இயக்கத் தூரத்தைவிட அதிகமாகும். எனவே, திருச்செங்கோட்டிலிருந்து ராசிபுரம் வரை நகரப் பேருந்து இயக்க தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளின்படி வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோட்டிலிருந்து ராசிபுரம் வரை நகரப் பேருந்து வேண்டுமென்று கடந்த ஆண்டு ஜுலை மாதம் 9 ஆம் தேதி*

நான் கோரிக்கை வைத்தேன். அடுத்த ஒரு மாதத்திற்குள்ளாகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் அவர்கள் அன்றைக்கே ஆண்டலூர்கேட் வரை பேருந்தை விட்டிருக்கின்றார். அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கொரோனா காலத்திலே பல பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இன்றைக்குப் பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்பட்டுவிட்டன. திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 10 வழித்தடங்கள் கொரோனா காலத்திலே நிறுத்தப்பட்டன. இன்று பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்பட்ட காரணத்தினால் அவையெல்லாம் இயக்கப்பட வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். இது திருச்செங்கோடு தொகுதியில் மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதும் இருக்கிற அனைத்துத் தொகுதிகளிலுமே இருக்கின்ற பிரச்சினை. இதற்காக ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மினி பேருந்துகள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம். அதன் மூலமாக விவசாயிகளும், கிராமப்புறங்களில் இருப்பவர்களும் நகரத்திற்கு வருவதற்கு பயன்படுத்தினார்கள். ஆனால், அதற்குப் பிறகு அது மேம்படுத்தப்படவில்லை. நகரப் பகுதிகளில் இருக்கிற பேருந்து நிலையத்திற்குள் மினி பேருந்துகளை அனுமதிப்பது கிடையாது. ஒரு கிலோ மீட்டரிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திலே அதை, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இப்போது இலவசப் பேருந்து வந்ததற்குப் பிறகு அது ஓடுவதும் இல்லை. யாரும் அதை ஓட்டத் தயாராக இல்லை. கேள்வியை முடியுங்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினி பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குள் வர வேண்டும். அது வந்தால்தான் அதைப் பயன்படுத்த முடியும். ஏனென்றால், கிராமத்திலிருந்து வருபவர்களுக்கு அப்போதுதான் அந்தப் பேருந்தைப் பயன்படுத்த முடியும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: ஆகவே, மினி பேருந்துகளை பேருந்து நிலையத்திற்குள் அனுமதிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

2022 ஏப்ரல் 25]

ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ஈஸ்வரன் அவர்கள் கூறியதைப்போன்று, கடந்த ஆண்டு 22–8–2021 அன்று அவருடைய கோரிக்கையின்படி, திருச்செங்கோட்டிலிருந்து ஆண்டலூர்கேட் வரை 10 நடைப் பேருந்துகளும்,* T7A *என்ற நகரப் பேருந்துமூலம் 10 நடைகளும் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன.*

அடுத்ததாக, அவர் கொரோனா பெருந்தொற்று காலத்தில் பல இடங்களில், பல வழித்தடங்களில் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருப்பதை மீண்டும் இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுகுறித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று, மினி பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பாக என்னைச் சந்தித்து இந்தக் கோரிக்கைகளையெல்லாம் அளித்திருக்கின்றார்கள். சட்டப் பேரவைக் கூட்டத்தொடர் முடிந்த பிறகு, அவர்களை அழைத்து இதுகுறித்துப் பேசவிருக்கிறோம். பேசிய பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

முற்பகல் 10–50

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலே* Transfer of Ownership Form *மற்றும்* Licence Renewal, Permit Renewal *போன்ற விஷயங்களெல்லாம்* Online *என்று சொல்லப்பட்டாலும், இடைத்தரகர்களுடைய தலையீடு இன்னும் குறைக்கப்படவில்லை. கண்டிப்பாக அந்த* Online

முறையை மேம்படுத்துவதன் மூலமாக இடைத்தரகர்களுடைய தலையீட்டைக் குறைக்க முடியும். அதன் மூலமாக ஏழை மக்கள் எந்தத் தொல்லையும் இல்லாமல் அந்த வசதிகளைப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கும். அது மேம்படுத்தப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த சீர்திருத்த நடவடிக்கைகளின் காரணமாக புதிய* Driving Licence *விண்ணப்பிப்பவர்களுக்கு இப்போது* Online *முறைப்படி வழங்குவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவங்கி வைத்ததை தாங்கள் அறிந்திருப்பீர்கள். எனவே, படிப்படியாக இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகள் இந்தத் துறையிலே தொடர்ந்து எடுக்கப்படும். வருங்காலங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை படிப்படியாக நிறைவேற்றப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி, கல்லூரிகளுக்கு மாணவ, மாணவிகள் சென்று வருவதற்கு ஏதுவாக கடலூரிலிருந்து பண்ருட்டிக்கும், பண்ருட்டியிலிருந்து கடலூருக்கும் சென்று வருகின்ற பேருந்துகளை பள்ளி, கல்லூரி நேரங்களில் அதிகப்படுத்த வேண்டுமென்கிற கோரிக்கையும், அதைப்போன்று, பண்ருட்டியிலிருந்து விழுப்புரம் சென்று வருகின்ற பேருந்துகளை நத்தம், சிறுகிராமம் வழியாகச் சென்று வருவதற்கு அனுமதித்தால் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமென்கிற கோரிக்கையும் வைக்கிறேன். இந்த இரண்டையும் செய்து தருவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி, கல்லூரி மாணவர்கள் செல்வதற்கான வழித்தடங்களில், கூடுதல் வழித்தடம் கேட்பதும், நடைகளை அதிகரிப்பதற்கான கோரிக்கைகளும் தொடர்ந்து பரவலாக வந்து கொண்டிருக்கின்றன. எனவே, இதுகுறித்து துறையிலிருந்து அந்தக் கல்லூரி நிருவாகத்தோடு பேசி, பல இடங்களில் அதற்குத் தேவையானவற்றைச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. வேல்முருகன் அவர்கள், அவருடைய குறிப்பிட்ட கோரிக்கையை எழுதித் தந்தால் அதுகுறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

170—

குடமுழுக்கு

***3124—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதி, குளித்தலை அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயில் குளித்தலையிலே இருக்கின்ற ஓர் ஆலயமாகும். அங்கே நீராடிச் சென்றால் காசிக்கு நிகரான ஒரு நீராடலும், காசி விசுவநாதரைத் தரிசித்ததுமாக ஓர் ஐதீகம் உண்டு. அந்தக் கோயிலின் திருப்பணிகளுக்கு மண்டல அளவிலான குழுவில் ஒப்புதல் பெறப்பட்டு, மாநில அளவிலான தொல்லியல் குழுவிலும் ஒப்புதல் பெறப்பட்டு, சுமார் 20 பணிகள் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டு அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி நிறைவடைந்து, அவர் கோரியபடி, வருகின்ற 16-6-2022 அன்று பாலாலயம் செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை